அவர்கள்கூட 'தொழுதூர் வந்தேன்; பொழுது புலர்ந்தது' என்று சொன்ன வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தக் கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி, அவசர விபத்து சிகிச்சைப் பிரிவுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக உருவாக்கித் தர அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும், ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்தப்பட்டு செயலாற்றிக் கொண்டிருக்கின்றது. தாங்கள் குறிப்பிடும் தொழுதூர் போன்ற பகுதிகளில் மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதும், எந்தெந்த ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய நெடுஞ்சாலைகளில் (National Highways), மாநில நெடுஞ்சாலைப் பகுதிகளில் இருக்கின்றன என்பதைத் தனியாக ஆய்வு செய்து, அவற்றையெல்லாம் விபத்து காய சிகிச்சை மையங்களோடு கூடியதாக மாற்றுவதற்கு உரிய கருத்துருவைப் பெற துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில், தாங்கள் குறிப்பிடும் தொழுதூர் பகுதியையும் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

238—

சிற்றுந்து வசதி

***888—திரு. பெரியண்ணன் அரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 ஜூன் 28]

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரின் புறநகர்ப் பகுதிகளில் சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரத்தின் குறுகிய சாலையில் வசிக்கக்கூடிய மக்களுக்கும் பேருந்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 23–10–2013 அன்று 'சிற்றுந்து திட்டத்தை' சென்னை மாநகரில் அறிமுகம் செய்து வைத்தார்கள். அதன் அடிப்படையில் இன்றைக்கு மாற்றுப் பேருந்துகள் உட்பட 210 சிற்றுந்துகள் சென்னை மாநகரில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதை மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துகின்ற எண்ணம் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு அவர்கள்.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்களுடைய கழகத்தினுடைய செயல் தலைவர், சட்டமன்றத்தின் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, புதுக்கோட்டை நகராட்சி, 1,75,000 வாக்காளர்கள் கொண்ட பகுதியாகும். 42 வார்டுகள் அந்தப் பகுதியில் இருக்கின்றன. அந்தப் பகுதியில் திருவெப்பூர், இரயில்வே கேட், பெரியார் நகர், ராம் தியேட்டர், அசோக் நகர், கலிப் நகர், காந்தி நகர், காமராஜபுரம், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மச்சுவாடி, கோவில்பட்டி ஆகிய பகுதிகளை இணைத்து route ஒன்று போட்டு, ஒரு பேருந்து கொடுக்கவேண்டுமென கோரிக்கை வைத்திருந்தோம். அது சிற்றுந்தாக இருந்தாலும் சரி, பெரிய பேருந்தாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும், பேருந்து வேண்டும் என்பதுதான்

எங்களுடைய கோரிக்கை. அண்ணன் திரு. நேரு அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, இந்த route–ல் பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. அது எப்போது cut ஆனது என்பது தெரியவில்லை. அந்தப் பேருந்து தற்போது இயக்கப்படவில்லை. அந்தப் பேருந்தினை மீண்டும் இயக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சிற்றுந்து இயக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். இப்போது சிற்றுந்து மட்டுமல்ல; பெரிய பேருந்தாக இருந்தாலும் பரவாயில்லை என்று கூறியிருக்கிறார். சென்னையைத் தவிர மற்ற 31 மாவட்டங்களில் 3,994 மினி பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதுவும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 34 மினி பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மருத்துவக் கல்லூரிக்கும், பேருந்து நிலையத்திற்கும் இடையே share autos–ஐ இயக்க வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுகோள் வைத்தார். அதற்கும் permit வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற நகரப் பகுதிகளிலும் share autos–ஐ இயக்குவதற்கு permit கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே மக்களுக்குப் போதிய அளவில் பேருந்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கும் வழித்தடங்களை ஆய்வு செய்து, தேவை இருக்கும்பட்சத்தில், அந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு அவர்கள்.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றுந்துகள் இயக்கப்படாவிட்டாலும், பெரிய பேருந்துகளாவது இயக்கப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. காரணம் என்னவென்றால், புதுக்கோட்டை நகரத்திலிருந்து மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட மற்ற பகுதிகளுக்கும்

2018 ஜூன் 28]

நேரடிப் பேருந்து வசதி கிடையாது. ஏதாவது ஒரு பகுதியிலிருந்து மருத்துவக் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், பேருந்து நிலையத்திற்குச் சென்று, அங்கிருந்துதான் செல்ல முடியும். மற்ற பகுதிகளிலிருந்து நேரடியாக மருத்துவக் கல்லூரிக்குச் செல்ல முடியாது. ஏனென்றால் பேருந்து நிலையத்திலிருந்து மட்டும்தான் மருத்துவக் கல்லூரி செல்வதற்கான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மிகப் பெரிய பகுதி. அதனால்தான் மீண்டும் நான் வலியுறுத்திக் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். முதல் வாய்ப்பை வழங்கியதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புதுக்கோட்டையில் மருத்துவக் கல்லூரி வழங்கப்பட்டு, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அதிகமான மக்கள் வந்து செல்கிறார்கள் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதையடுத்து, அந்தப் பகுதிகளில்* share autos*–ஐ இயக்குவதற்கு* permit *வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கும் அந்த நகரப் பகுதிகளில் இருக்கும் வழித்தடங்களையும் ஆய்வு செய்து, தேவை இருக்கும்பட்சத்தில், அந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமலும் நம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை*

நோக்கி வணங்குகிறேன். அமைதியான முறையில், அதிவேகமாக மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பக்கபலமாக இருந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களைச் செயல்படுத்த உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களையும் வணங்குகிறேன்.

அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, பர்கூர் ஊராட்சியானது, 32 குக்கிராமங்களைக் கொண்ட மலைப் பகுதியாகும்; அதிக நிலப்பரப்பைக் கொண்ட பகுதியாகும். அங்குள்ள மக்கள், தங்களது அத்தியாவசியத் தேவைகளுக்கும், அவசர வேலைகளுக்கும் அந்தியூர் நகரத்திற்குச் சென்றுவர, தாமரைகரை பர்கூர் பிரதான சாலை வழியாக நீண்ட தூரம் நடந்து வந்து, பேருந்தில் ஏறிச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, மக்களுக்காகச் செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, பாமர மக்களான மலைப் பகுதி மக்களுக்குப் போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தி, அவர்கள் வாழ்வு வளம்பெற புதிய பேருந்துகள், அதாவது, நீலகிரி மாவட்டத்தில் இருப்பதைப்போன்ற Cut Chase *பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். இதுசம்பந்தமாக ஏற்கெனவே மாமன்றத்திலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் கோரிக்கை வைத்துள்ளேன் என்பதையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த மலைப் பகுதிக்குப் பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே கோரிக்கை வைத்துக் கொண்டே இருக்கிறார். அந்த மலைப் பகுதியிலே பேருந்து வசதி இல்லையென்பதை நாங்கள் ஆய்விலே கண்டறிந்திருக்கிறோம். மலைப் பகுதியில் இயங்கக்கூடிய Short Wheel Base பேருந்துகள் புதிதாக வரவிருக்கின்றன. அந்தப் பேருந்துகள் கூண்டுகட்டி வரும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற அந்த வழித்தடத்தில் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா

2018 ஜூன் 28]

அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தபோது, சிற்றுந்து இயக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டு, பல்வேறு நகரங்களுக்கு கிராமப்புற மக்கள் செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டது. ஆனால், இன்றைக்கு சிற்றுந்துகளை நீட்டிப்பு செய்ய முடியாமலும், பேருந்து நிலையத்திற்குள் வரமுடியாமலும், பல பேருந்துகளை இயக்க முடியாமலும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கிட்டத்தட்ட 3,000–க்கும் மேற்பட்ட சிற்றுந்துகள் இயக்கப்படுவதாகத் தெரிவித்திருக்கிறார். ஆனால் அதற்கென்று தனியாக ஒரு கொள்கைகூட இல்லை. ஆகவே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்போது, சிற்றுந்துகள் குறித்து தனிக் கவனம் செலுத்தி, அதற்கென்று தனியாக ஒரு கொள்கையை உருவாக்க வேண்டும்.*

முற்பகல் 10–55

குறிப்பாக, கிராமப்புற மக்கள், நகரங்களுக்கு வருவதற்கு சிற்றுந்துகள் மிக வசதியாக இருக்கின்றன. ஆனால், அரசுத் துறை அதிகாரிகள், சிற்றுந்துகள் தேவையில்லை என்று தெரிவிக்கிறார்கள். ஆனால், தனியார் பலபேர் ஏற்கெனவே சிற்றுந்துகளை இயக்கி வருகிறார்கள். கிராமப்புற மக்களுக்கு மிக உதவியாக இருக்கக்கூடிய இத்தகைய சிற்றுந்துகளை இயக்க முன்பு தனியாருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் தனியார் இயக்க வேண்டிய வழித்தடங்களிலெல்லாம் அரசே பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறது. அதுபோல, எந்தெந்த மலைப் பகுதிகளில் அரசு சேவை வழங்கப்படுகிறதோ, அதுபோக மீதியுள்ள பகுதிகளில் தனியார் விரும்பினால், அவர்களுக்கு அனுமதி வழங்கி பேருந்துகளை இயக்க வைத்தால், ஏழையெளிய மக்கள், கிராமப்புற மக்கள் நகரத்திற்கு வந்து செல்வதற்கு வசதியாக இருக்கும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கைக்கு முன்பாக அவர்களை அழைத்துப் பேசிட வேண்டும். அவர்களுடைய குறைகளை அறிந்து, அதனை

நிறைவேற்றி அந்தச் சிற்றுந்துகள் நிறுத்தப்படாமல் தொடர்ந்து இயங்கிட வழிவகை செய்ய வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட இந்த மினி பேருந்து திட்டத்தின்மூலம், பேருந்து வசதி இல்லாத வழித்தடங்களில் 70 சதவீதமும், பேருந்து வசதி உள்ள வழித்தடங்களில் 30 சதவீதமும் மினி பேருந்து இயக்க வேண்டுமென்று வரையறுக்கப்பட்டு, 31 மாவட்டங்களில் 3,994 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒருசில பேருந்து உரிமையாளர்கள் சில வழித்தடங்களில் வருவாய் குறைவாக இருப்பதால், அதை நிறுத்திவிட்டார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட விதிமுறைகளின்படி, பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல; இன்னும் அதேபோன்ற unserved area, served area போன்ற பகுதிகளில் மினி பேருந்துகள் இயக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து விண்ணப்பித்தால், அவர்களுக்கு அந்த அனுமதி கொடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாநகராட்சியை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதியில் அநேக குடியிருப்புகள் புதிதாக உருவாகியுள்ளன. அவர்கள் போக்குவரத்து வசதியின்றி மிகவும் சிரமப்படுகிறார்கள். குறிப்பாக வார்டு 3–க்குட்பட்ட ராஜகோபால் நகர், நிகிலேஷ் நகர், புஷ்பா நகர், கதிர்வேல் நகர் போன்ற பகுதிகளிலெல்லாம் போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். ஏற்கெனவே அங்கு மினி பஸ் செல்வதற்கான வழித்தடம் ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் இப்பொழுது புதிதாக உருவாகியுள்ள மேற்படி பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்திட வேண்டும்; அல்லது மினி பேருந்துக்கு புதிய வழித்தடத்தையாவது

2018 ஜூன் 28]

ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த மக்களுக்கு வசதியாக இருக்கும். எனவே, அதைச் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கக்கூடிய அந்த வழித்தடங்களை விரிவாக்கம் செய்வது என்பது அரசினுடைய கொள்கை முடிவு. ஒரு பேருந்திற்கு மட்டும் ஒரு புதிய வழித்தடத்தை விரிவாக்கம் செய்ய இயலாது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்த வழித்தடத்திலே துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, அங்கு தேவையிருக்குமாயின், அரசுப் பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதி, கிட்டத்தட்ட 238 கிராமங்கள் நிறைந்த தொகுதி. தொகுதிக்குச் சென்று தாய்மார்களைச் சந்திக்கும்போது, அவர்கள் வைக்கின்ற முதன்மையானகோரிக்கை, எங்களுடைய குழந்தைகள் உரிய நேரத்தில் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை; உரிய நேரத்தில் பேருந்து வருவதுமில்லை; வந்தாலும் தாமதமாக வருகிறது. மாலை நேரங்களில், முக்கியமாக பெண்கள் வீட்டுக்கு தாமதமாக வருகிறார்கள்; 7 மணிக்கு வருகிறார்கள்; 8 மணிக்கு வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த அரசு, மேலை நாடுகளில் இருப்பதுபோல், ஒரு புதிய கருத்துரு கொண்டு வந்து, தமிழகமெங்கும் 5 பஞ்சாயத்திற்கு ஒரு school bus வருவதுமாதிரி, ஒரு School Bus Service என்ற திட்டத்தைக் கொண்டு வருமாறு இந்த அரசின் கவனத்திற்கு ஓர் ஆலோசனையாகக் கூற விரும்புகிறேன். அதுபோன்ற கருத்துரு இந்த அரசின் கவனத்தில் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.*

10,000 கோடி ரூபாய் செலவில், 8 வழிச் சாலை அமைத்து பாதுகாப்பாகச் செல்ல வேண்டுமென்று நினைக்கின்ற இந்த அரசு, கிராமப்புறங்களில் உள்ள ஏழையெளிய மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்குப் பாதுகாப்பாகச் செல்வதற்கு ஆவன செய்திட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த வழித்தடத்திலே பள்ளிக் குழந்தைகளுக்கு பேருந்து வசதி இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். அவர் அதை எழுத்து மூலமாகக் கொடுத்தால், உண்மையிலேயே பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு பேருந்து வசதி இல்லாமல் இருந்தால், அவர்களுக்குப் பேருந்து வசதி செய்து கொடுப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, வழிவகை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

239—

குடமுழுக்கு

***5602—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூரிலுள்ள அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?